

# Madurai Symposium

## Advancing Development

September 24-29, 2007

செய்தியறிக்கை

செப்டம்பர் 24, 2007

# மதுரைக் கூடலரங்கில் குண்டாறு வயலகப் பேரிணையம் தொடக்கம்

தென்தமிழகத்தின் முக்கிய மானாவாரி ஆறுகளில் ஒன்றான குண்டாறு மதுரை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் நீராதாரத்திற்கு அடிப்படையானதாகும். 2,276 கண்மாய்களுக்கு நீர் வழங்குவதோடு, 71,520 ஹெக்டேர் நிலங்களுக்கு பாசன வசதியையும் வழங்கி வருகிறது. பல்வேறு ஆக்கிரமிப்புகளாலும், தொடர்ந்த நீர்நிலைப் பராமரிப்பின்மையாலும், அளவுக்கு மீறி நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதாலும் இந்த வடிநிலப்பகுதியைச் சார்ந்து வாழும் மக்கள் தங்களின் அடிப்படைத் தண்ணீர்த் தேவைகளுக்கே மிகவும் துன்புறுகின்றனர். இதனைத் தவிர்க்க சேடப்பட்டி, திருமங்கலம், கள்ளிக்குடி, திருச்சுழி, மானாமதுரை, முதுகுளத்தூர், கடலாடி, திருப்புல்லாணி, விளாத்திக்குளம் மற்றும் புதூர் போன்ற பகுதிகளில் உள்ள வயலக அமைப்புகள் அவ்வப்பகுதியிலுள்ள உழவர்களோடு இணைந்து செயலாற்றி வருகின்றன. அரசுத்துறைகள், ஆராய்ச்சி நிலையங்கள், கல்விநிலையங்கள், மக்கள் அமைப்புகள், உழவர் அமைப்புகள், வங்கிகள் மற்றும் சில தனியார் நிறுவனங்களோடு வயலக வட்டாரங்களும் இணைந்து மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற மதுரை கூடலரங்க நிகழ்வில் குண்டாறு வயலகப் பேரிணையத்தைத் தொடங்கியுள்ளன.

'குண்டாறு வடிநிலப்பகுதியில் சுமார் 5 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். இதில் 70 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையையும், அது சார்ந்த தொழில்களையும் நம்பி வாழ்கின்றனர். இவ்வடிநிலப்பகுதியின் நீராதார மேம்பாடு என்பது இங்கு வாழ்கின்ற மக்களின் வறுமை ஒழிப்பிற்கு இன்றியமையாததாகும்' என்று தானம் வயலக அறக்கட்டளையின் அணித்தலைவர் இராஜசேகரன் தனது தொடக்க உரையில் கூறினார். வயலக இயக்கப் பொருளாளர் இரா.வசவலிங்கம் தலைமையுரை நிகழ்த்தினார். வேளாண் பொறியியல் துறையின் கண்காணிப்புப் பொறியாளர் (ஓய்வு) இரா.வெங்கிடசாமி குண்டாறு வடிநிலத்தில் ஒருங்கிணைந்த நீராதார மேலாண்மை என்ற பொருளில் சிறப்புரையாற்றினார். குண்டாறு வடிநிலப்பகுதியின் நீ'ராதார மேம்பாடு குறித்து அருளானந்தர் கலைக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முத்துசந்தானம் பேசினார்.

முன்னதாக மூன்றாவது 'மதுரைக் கூடலரங்கம் 2007' நிகழ்வின் தொடக்க விழா தமுக்கம் கலையரங்கத்தில் இன்று காலை நடைபெற்றது. களஞ்சிய இயக்கத்தின் பாவலர் வேங்கையன் இறைவணக்கப்பாடல் பாட, தானம் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் மா.ப.வாசிமலை அனைவரையும் வரவேற்றார். தலைமையுரை நிகழ்த்திய ஹைடெக் அராய் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.டி.பங்கேரா, 'அடுத்து வருகின்ற 2020ஆம் ஆண்டில் இந்தியா வளர்ச்சி பெற்ற ஒரு நாடாக உருவாகும். ஆனாலும் வறுமையின் கோரப்பிடியில் தற்போது ஆட்பட்டுள்ள மக்கள் அதிலிருந்து விடுபட வேண்டுமெனில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை அடித்தட்டு மக்களுக்கானதாக மாற்ற வேண்டும். நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் கூறியது போல், கிராமங்களில் தான் இந்தியா வாழ்கிறது என்பதை அங்கு வாழும் மக்களை நோக்கி முழுமையாய்ச் சென்றடையும் வளர்ச்சித் திட்டங்களை வைத்துத்தான் தீர்மானிக்க இயலும்' என்றார்.

கனடாவைச் சேர்ந்த கமிலா டவ் பேக்கர், 'பாதுகாக்கப்பட்ட அதே சமயத்தில் எளிதாகக் கிடைக்கக்கூடிய குடிநீர் என்பது மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை மிகப் பெரும் சவாலாக இருக்கிறது. பெரும்பாலான நாடுகளில் மூன்றில் இரண்டு விழுக்காடு மக்கள் தங்களுக்கான குடிநீரை 15 நிமிடத்திற்குள் பெறுவதற்கான வசதியின்றியே வாழ்கிறார்கள். குறைந்தபட்சம் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய நீரை சுகாதாரமான மற்றும் அதிக பொருட்செலவில்லாத வகையில் பெறுவதற்கான தொழில்நுட்பங்களை தாய்லாந்து, இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் அறிமுகப்படுத்தி வருகிறோம்' என்றார்.

சுற்றுச்சூழல் துறை இயக்குநர் கே.எஸ.நீலகண்டன் பேசுகையில், 'மதுரை போன்ற பெருநகரங்களில் கழிவு நீரேற்று வசதிகளை சுற்றுச்சூழல் துறை சிறப்புடன் செய்து வருகிறது. கூவம், பக்கிங்காம் கால்வாய் போன்ற நீர்வழித்தடங்களில் கலக்கும் கழிவு நீரை சரியான முறையில் சுத்திகரிப்புச் செய்வதன் மூலம் நீரின் மாசுபாட்டைத் தவிர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்' என்றார்.

காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மார்க்கண்டன் தனது சிறப்புரையின்போது, 'நீர்நிலைகள் பராமரிப்பினை படித்தவர்களே புறக்கணிக்கும் நிலை தற்போது உள்ளது. நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படும் நிலை காரணமாக சூழல் மாசுபாடு மிக அதிகளவில் உள்ளது. பல்வேறு அரசு அமைப்புகள் வாயிலாக மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் அடித்தட்டு மக்களின் வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்' என்றார்.

தியாகராசர் பொறியியற் கல்லூரியின் முதல்வர் அபய்குமார், வயலக இயக்கத்தின் தலைவர் துரைசாமி, களஞ்சிய இயக்கத்தின் தலைவி சின்னப்பிள்ளை ஆகியோரும் சிறப்புரையாற்றினர். பிற்பகலில் நடைபெற்ற குண்டாறு வடிநிலக் கருத்தரங்க அமர்வுகளில் குண்டாறு வடிநிலப்பகுதியின் பிரச்சனைகள், அதற்கான தீர்வுகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்து பல்வேறு தலைப்புகளில் உழவர்களும், வல்லுநர்களும் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மதுரையின் குடிநீர் மற்றும் கழிவு நீர்ப் பிரச்சனைகள், நீராதாரங்களில் சுற்றுச்சூழல் மாசுபாடுகள், தமிழ்நாடு துல்லியப் பண்ணைத்திட்டம், நீரியல் துறைகளில் தகவல் சேவைகள் குறித்தும் தனித்தனிக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

புகைப்படக்குறிப்புகள்

D1 P1 சுற்றுச்சூழல் துறை இயக்குநர் கே.எஸ.நீலகண்டன் குத்து விளக்கேற்றுகிறார். உடன் (இடமிருந்து) கோவை வேளாண் பல்கலைக்கழக விரிவாக்கவியல் துறைப் பேராசிரியர் வடிவேல், ஹைடெக் அராய் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கேரா, களஞ்சிய இயக்கத் தலைவி சின்னப்பிள்ளை

D1 P2 மதுரைக் கூடலரங்கில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்

D1 P3 நீர் மேலாண்மையில் நீர்க்கட்டிகள் குறித்த நூலினை காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் மார்க்கண்டன் வெளியிட ஆந்திர மாநில சித்தூர் மாவட்ட நீர்க்கட்டிகள் அமைப்பின் தலைவர் ஆஞ்சப்பா பெற்றுக் கொண்டார். உடன் தானம் வலயக அறக்கட்டளையின் முதன்மை நிர்வாகி குருநாதன் உள்ளார்.

D1 P4 குண்டாறு வயலகப் பேரிணையத்தை களஞ்சிய இயக்கத் தலைவி சின்னப்பிள்ளை தொடங்கி வைக்கிறார்

D1 P5 குண்டாறு வயலகப் பேரிணைய விழாவில் கலந்து கொண்ட உழவர்களும், வல்லுநர்களும் மேடையில் அமர்ந்துள்ளனர்

D1 P6 குண்டாறு வயலகப் பேரிணையத்தை வயலக இயக்கத் தலைவர் துரைசாமி தொடங்கி வைக்கிறார்.